25-07-2013 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

## தலைப்பு : மாட்டிறைச்சி: உணவுக் கலாசாரமும் எதிர்ப்பு மனநிலையும்

மாட்டிறைச்சி உண்ணல் என்பது பெரும்பாலும் எல்லாக் கலாசாரத்திலும் இருந்து வந்துள்ளது. இன்றுவரை தொடர்ந்து கொண்டும் உள்ள ஓர் உணவுப் பழக்க வழக்கமும் ஆகும்.

மாட்டிறைச்சி பற்றிய கட்டுப்பாடுகள் இந்து மதத்திலும் பௌத்த மதத்திலும் வெளிப்படையாகவே உள்ளது. இருப்பினும் இந்து மதத்தில் ஆரம்ப காலத்தில் அதாவது வேத காலம் எனச் சொல்லப்படும் காலத்தில் சகல தரப்பினரும் மாட்டிறைச்சி உண்ணும் வழக்கம் உடையவர்களாகவே இருந்திருக்கின்றனர். மேலும் யாகங்களில் கால்நடைகளை அவிப்பொருளாகப் போடுவது அதிகமாகக்காணப்பட்டது.

அக்காலத்தில் தோன்றிய பௌத்த, ஜைன மதங்கள் புலால் அற்ற உணவுப் பழக்கத்தை முன்வைத்துப் பிரச்சாரம் செய்தன. அதே வேளை பௌத்தம் மாட்டிறைச்சிக்கு எதிரான பிரச்சாரத்தைச் செய்தது. அதன் பின்னரே இந்து மதத்தில் புலாலற்ற உணவுப் பழக்கம் வந்ததோடு புலால் உணவு உண்பவர்களை இழிவாக பார்க்கும் வழக்கமும் ஏற்பட்டது.

புனிதப்பசு என்ற கருத்தாக்கம் மிகவும் பிற்காலத்தில் உருவாக்கப்பட்டது. முதல் ஆயிரமாண்டின் தொடக்கத்தில் இந்திய சமூகம் படிப்படியாக நிலப்பிரபுத்துவ அமைப்புக்கு மாறும் போது சட்டம் இயற்றுபவர்கள் மக்கள் மாட்டிறைச்சி சாப்பிடுவதைத் தடை செய்ய ஆரம்பித்தார்கள். அது மிகப்பெரிய சமூக கலாச்சார மாற்றத்துக்கு வழி வகுத்தது.

உலகளாவிய ரீதியில் எடுத்துக் கொண்டாலும் ஆரம்பகாலம் முதல் இன்று வரை மாட்டிறைச்சி ஒரு பிரதான உணவுப்பழக்க வழக்கமாக இருந்து வந்துள்ளது. சிகப்பு இறைச்சி வகைக்குள் அடங்குபவற்றில் அதிகம் நுகரப்படும் இறைச்சி வகையாக மாட்டிறைச்சி உள்ளது.

வளர்ச்சியடைந்த நாடுகளைப் பொருத்தவரையில் மாட்டிறைச்சி என்பது மிகப்பெரிய தொழிற்துறையாக உள்ளது. மிகப்பெரிய முதலும் இலாபமும் உள்ள ஒரு தொழிற்துறையாக உள்ளது. 2011ம் ஆண்டுக் கணக்கெடுப்பின் அடிப்படையில் அமெரிக்காவின் மாட்டிறைச்சித் தொழிற்துறையின் மொத்த மதிப்பு 79 பில்லியன் அமெரிக்க டாலர்கள்.

> **இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இந்துக்களாலும் பௌத்தர்களாலும் முன்னெடுக்கப்படும் மாட்டிறைச்சி உணவுக்கான எதிர்ப்புப் பிரசாரம் அதன் உள்ளடக்கத்தில் பெருமளவும் இஸ்லாமிய எதிர்ப்பினையே கொண்டிருக்கிறது. இஸ்லாமியர்கள் மீதான எதிர்ப்பு மனநிலையை மக்களுக்கு உருவாக்குவதற்கான ஒரு கருவியாக மாட்டிறைச்சிக்கு எதிரான பிரசாரம் முன்னெடுக்கப்படுகிறது.**

இப்படி உலகம் முழுவதும் முக்கியமான ஒரு உணவுப் காரணங்களை முன்வைத்து மாட்டிறைச்சி எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. மிருகங்களது உரிமைகள், மரபணு மாற்றப்பட்ட இறைச்சி, மனித ஆரோக்கியம், மதம் என இந்தக்காரணங்கள் விரிந்து செல்கிறது.

பல்வேறுபட்ட அமைபுக்கள் உலகம் முழுவதும் பரந்து காணப்படுகின்றன. "Profiling the most prominent anti-beef industry activist groups" என்ற ஒரு அறிக்கை உலகம் முழுவது இருக்கும் பிரதான மாட்டிறைச்சி எதிர்ப்பு அமைப்புக்களைப் பட்டியலிடுகிறது. Organic Consumers Association (OCA), Global Resource Action Center for the Environment, Center for Food Safety, Farm Sanctuary என்பன அவற்றில் சில.


ஆனால் பிரதான அமைப்புகள் எதுவும் மதரீதியான காரணங்களை முன்வைத்து எதிர்க்கவில்லை.

மிகுதி அடுத்த பக்கம்

## அடுத்து வரும் தலைப்புக்கள்

**மொழியிலும் வாழ்விலும் "மிகைத்திருத்தம் (Hypercorrection)"**
01-08-2013

**இந்திய அரசியலில் தெலுங்கானா**
08-08-2013



மார்க்சியமும் இலக்கியமும்

*[நூலாசிரியர் : (தொகுப்பு) ஏ. ஜே. கனகரட்னா | வெளியீடு : அலை வெளியீடு | வெளியீட்டு ஆண்டு : 1981 | பக்கங்கள் : 106 ]*

மாபெரும் ஒக்டோபர் புரட்சிக்கு உடனடுத்து சோவியத் யூனியனில் ஏற்பட்ட தீவிரமான இலக்கியக் கோட்பாட்டு உரையாடல்கள், சர்ச்சைகள், விவாதங்கள் போன்றவற்றை இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ள கட்டுரைகள் அறிமுகம் செய்ய முயல்கின்றன. அக்காலத்தில் சோசலிச யதார்த்தவாதம் பற்றி இலங்கை எழுத்துச்சூழலில் ஏற்பட்ட உரையாடகள் குறித்த அறிமுகத்தையும் இந்நூல் தருகிறது.

இந்நூல் தற்போது தமிழகத்தில் மறுபதிப்பும் கண்டுள்ளது.

## சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 6:00 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
121 , ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.

0772260165
0752151580

FB group : facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் : circle.thulaa.net

வலைப்பதிவு : circlelk.blogspot.com

## மாட்டிறைச்சி: உணவுக் கலாசாரமும் எதிர்ப்பு மனநிலையும்

முன்பக்கத் தொடர்ச்சி..

இந்தியாவில் பசுவதை சட்டரீதில் கண்காணிக்கப்படும் போதும், மாட்டிறைச்சி உண்ணல் சட்டரீதியில் குற்றமாகக் கருதப்படவில்லை. அண்மையில் 2010 மார்ச் மாதம் கர்நாடகா அரசால் மற்றுமொரு சட்டம் உருவாகப்பட்டது. இதற்கு மிகப்பெரும் எதிர்ப்புக் கிளம்பியது.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இந்துக்களாலும் பௌத்தர்களாலும் முன்னெடுக்கப்படும் மாட்டிறைச்சி உணவுக்கான எதிர்ப்புப் பிரசாரம் அதன் உள்ளடக்கத்தில் பெருமளவும் இஸ்லாமிய எதிர்ப்பினையே கொண்டிருக்கிறது. இஸ்லாமியர்கள் மீதான எதிர்ப்பு மனநிலையை மக்களுக்கு உருவாக்குவதற்கான ஒரு கருவியாக மாட்டிறைச்சிக்கு எதிரான பிரசாரம் முன்னெடுக்கப்படுகிறது.

தாழ்த்தப்பட்ட மக்களை இழிவுபடுத்தும் நோக்கத்துடனும் மாட்டிறைச்சி எதிர்க்கப்படுகிறது. குறித்த தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்தோர்தான் மாட்டிறைச்சி உண்வபார்கள் என்ற கருத்து ஆதிக்க சாதி இந்துக்களிடையே பரவலாக நிலவுகிறது.

அரசியல் நோக்கங்களோடு செய்யப்படும் இவ்வாறான பசுவதைப் பிரசாரங்கள் கோழி இறைச்சிக்கு எதிராகவோ மீன் முட்டைபொன்றவற்றுக்கு எதிராகவோ செய்யப்பௌவதில்லை என்பதே இதன் கபடத்தனத்துக்குச் சான்றாகும். மாடுகளை வதைத்துப் பெறப்படும் பால், விவசாய உற்பத்திப்பொருட்கள், போக்குவரத்துச் சேவைகள் போன்றவற்றையும் இப் பசுவதை எதிர்ப்பியக்கங்கள் கண்டுகொள்வதில்லை.

இலங்கையில் அண்மைகாலமாக பொதுபல சேனாவால் முன்னெடுக்கப்படும் இஸ்லாமிய எதிர்ப்பு நடவடிக்கையில் தற்போது மாட்டிறைச்சிக் கெதிரான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. உண்மையில் இது மத முகமூடியப் போட்டுக் கொண்டு நடக்கும் ஒரு பொருளாதார ரீதியான எதிர்ப்பு நடவடிக்கையாகும்.

பொதுபல சேனாவால் வெளியிடப்பட்ட ஒரு கருத்து இதை வெளிப்படையாக உணர்த்துகிறது. அதாவது "மாடுகளை இங்கு வெட்ட வேண்டாம். மாட்டிறைச்சி தெவையானால் இறக்குமதி செய்து கொள்ளுங்கள்." என்ற கருத்தாகும். இஸ்லாமியர்களது மூலதனத்துக்கும் பௌத்த மூலதனத்துக்கும் இடையிலான போட்டியின் வெளிப்பாட்டின் ஒரு பகுதியே இலங்கையில் அண்மையில் தோற்றம் பெற்ற மாட்டிறைச்சி எதிர்ப்பாகும்.

### மொழியிலும் வாழ்விலும் "மிகைத்திருத்தம் (Hypercorrection)"
### (இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு)

1. மொழியில் மிகைத்திருத்தம் (Hypercorrection) பற்றிய அறிமுகம்

2. மிகைத்திருத்தம் ஏற்படுவதற்கான சூழ்நிலைகள்.

3. பிற மொழிகளைப் பயன்படுத்தும்போது ஏற்படும் மிகைத்திருத்தம் (குறிப்பாக ஆங்கிலம்)

4. பிறமொழிகளின் செல்வாக்கால் தமிழில் ஏற்படும் மிகைத்திருத்தம் (எடுத்துகாட்டுகளுடன்)

5. சமூக வாழ்வில் மிகைத்திருத்தமும் அதற்குக் காரணமாகும் அதிகார உறவுகளும்

6. மிகைத்திருத்தம் ஏற்படும் சந்தர்ப்பங்கள் பற்றிய கலந்துரையாடல்




பொது பல சேனாவை ரசிக்கின்ற மனநிலை..!

பொது பல சேனா போன்ற மத அடிப்படைவாத அமைப்பொன்று தற்போது அவசியம் என்று எண்ணும் சிறுமனநிலை கொண்ட சிறுபான்மையின மக்கள் நிறையவே இருக்கிறார்கள். (பெரும்பான்மையின மக்களைப் பற்றி அப்புறமாக பேசலாம்) அது, தமிழ்- முஸ்லிம் என்கிற பிளவுபட்ட மனநிலையிருந்து வருவது. அது எவ்வளவுக்கு மோசமானது என்றால், இஸ்லாமிய வாழ்வியல் அல்லது மார்க்கவியலின் மீது பொது பல சேனா மேற்கொள்ளும் அத்துமீறல்களை ரசிக்க வைக்கிறது. “அவங்களுக்கு இது வேணும்…” என்கிற வார்தைகளின் அது வெளிப்படுவதுமுண்டு. அந்தக்கணங்களை ரசிக்க முடியாது. எவ்வளவு பூசி மொழுகினாலும் அது, பொது பல சேனாவின் மந்த மனநிலையைத் தாண்டியது. அச்சுறுத்தலானது.

இது, இரண்டு சிறுபான்மையின மக்களிடமும் உள்ள சிக்கல். தமிழர்கள் மீதான அச்சுறுத்தலை முஸ்லிம்கள் ரசிப்பதும், முஸ்லிம்கள் மீதான அச்சுறுத்தலை தமிழர்கள் ரசிப்பதும் என்று ஒரு அழுக்கான மனநிலையின் தொடர்ச்சி இது. இதனை இல்லை என்று முற்றாக மறுதலிக்க முடியாது. ஏனெனில், குறிப்பிட்டளவானர்கள் இப்படித்தானே இருக்கிறார்கள்/ இருக்கிறோம்.

பௌத்த பயங்கரவாதம், இந்து தீவிரவாதம், இஸ்லாமிய பயங்கரவாதம், கிறிஸ்தவ காலணித்துவவாதம் என்று மதங்களின் அடையாளத்துடன் எல்லா காலங்களிலும் பயங்கரவாதமும்- இன அழிப்பும்- அத்துமீறல்களும்- பிரிவினைவாதமும் அரங்கேறியே வந்திருக்கின்றன. அதன் சாட்சிகளாகவே தமிழர்களும்- முஸ்லிம்களும் இலங்கையில் பிளவுபட்ட இனங்களாக குரோதங்களை மனங்களில் சுமந்துகொண்டு நிற்கிறோம். அதன் நீட்சி ‘பொது பல சேனா’ போன்ற அமைப்புக்களுக்கு உரமூட்டுகின்றன.

பொது பல சேனா முன்வைத்த ‘ஹலால்’ பிரச்சினையின் போது இஸ்லாமியர்கள் தவிர்ந்த (குறிப்பிட்டளவு) மக்களிடம் ஏற்பட்ட கொண்டாட்ட மனநிலையையும், இப்போது ‘அபாயா’ விடயத்தில் 'பயங்கரவாதத்தின் ஆடை' என்கிற அடையாளப்படுத்தல்களை பொது பல சேனா முன்வைக்கிற போது ஏற்படுகின்ற மனநிலையும் ஒரே மாதிரியாகவே இருக்கின்றது.

மிகவும் அச்சுறுத்தலான விடயங்களை பொது பல சேனா மிக இலகுவாக ஊடகங்கள், மக்களின் முன்னால் எந்தவித கூச்சமும் இன்றி வைக்கிறது. சம்பந்தமில்லாத விடயங்களையெல்லாம் சம்பந்தப்படுத்தி காரண காரியங்களைக் கூறுகின்றது.

பௌத்த தர்மம் என்ன போதித்து என்ற அடிப்படையுடன் நடக்க வேண்டும் என்று வலியுறுத்தும், அந்த அமைப்பிடம் புத்தன் போதித்த தர்மத்தின் சிறிய அடிப்படைகள் கூட கிடையாது. அப்படியிருக்கிற போது, அந்த அமைப்பின் மனநிலையையை ரசிக்க ஆரம்பித்திருக்கிற சிறுமை கொண்ட சிறுபான்மையினரின் மனநிலையிடமே அதிகம் அச்சப்பட வேண்டியிருக்கிறது...!!

-புருஜோத்மன் தங்கமயில் (Facebook Status)

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடலகளைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.

BY NC SA